# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-424/2019 | Taluk | |
| Deposition of Witness for | : PW-1 | Calling | : |
| Name | : செந்தில்வேல் | Religion | : |
| Father Name | : ராஜாமணி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 9th March 2026.

-----------------------------------------------------------------------------------------------

(2 எதிரி எதிரி ஆஜர்).

(1, 3 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

முதல் விசாரணை:-

நான் பட்டங்மங்களம் மேலத்தெருவில் குடியிருந்து வருகின்றேன். சம்பவ சமயம் கல்லல் ஒன்றிய 7-வார்டு கவுன்சிலராக பணியில் இருந்தேன். ஆஜர் 2-வது எதிரியை தெரியும். மற்ற எதிரிகளில் 1, 2, 3, 5 எதிரிகளை தெரியும், உள்ளூர்காரர்கள் தான். மற்ற எதிரிகளை பார்த்தால் தான் தெரியுமா என்று சொல்ல முடியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

நான் திருப்பத்தூர் சட்ட மன்ற தொகுதி அ.இ.அ.தி.மு.க கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக கடந்த 11.05.2016-ம் தேதி மாலை 6.30 மணியளவில் பட்டமங்களம் கடை வீதியில் இரட்டைஇலை சின்னத்திற்கு வீடுவீடாக சென்று வாக்கு சேகரிக்க நானும், எங்கள் ஊரை சேர்ந்த மேலபட்டமங்கள ஊராட்சி மன்ற தலைவர் நரசிங்க பெருமாள் மற்றும் அழகப்பன் மனைவி சேக்கம்மை, ராமசாமி மகன் அழகப்பன், கருணாகரன், அழகர், சேலைராஜ் ஆகியோருடன் 100-க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்களும் வாக்கு சேகரித்து கொண்டு மேற்கில் இருந்து கிழக்கில் உள்ள நாடகமேடை அருகே சென்ற போது அந்த சமயத்தில் பட்டமங்களத்தை சேர்ந்த 1 முதல் 7 எதிரிகளுடன்

சேர்ந்து பெயர், ஊர் தெரியாத சுமார் 15-நபர்கள் கார்களில் இருந்து இறங்கி அவர்கள் கையில் வைத்திருந்த அறுவாள், இரும்பு பைப்பு, வால், கூர்மையான கத்தி, கடப்பாறை போன்ற ஆயூதங்களை கையில் எடுத்து கொண்டு எங்கடி வந்து ஓட்டு கேட்கிறிங்க ஏண்டி, தேவுடியா முண்டைகளா என பெண்களை பார்த்தும், 7-எதிரிகள் சேர்ந்து அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த ஆயூதங்களை காட்டி மிரட்டிய போது அவர்களுடன் வந்திருந்தவர்கள் கைய்யால் ஆண்களையும், பெண்களையும் அடிக்க தொடங்கிய போது என்னையும் முதுகில் கூட்டத்தில் இருந்தவர்கள் அடித்துவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு பயந்து ஓடியதில் பலர் கீழே விழுந்ததில் கை, கால்களில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், யாராவது இனிமேல் இரட்டைஇலை சின்னத்திற்கு ஓட்டு கேட்டு வந்தால், உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், தேர்தல் சமயத்தில் வெளியூர் காரர்களுடன் எங்கள் ஊர்காரர்களும் சேர்ந்து கொண்டு வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு மிகவும் அசிங்கமாக பேசியும், கொடுரமான ஆயூதங்களால் தாக்க வந்ததால் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்கள் வந்த வாகனத்தையும், அவர்களை மறித்து கொண்டதால் எதிரிகள் உள்ளீட்ட நபர்கள் அங்கிருந்த தப்பித்து போக பக்கத்தில் உள்ளவர்களை காலால் மிதித்து தள்ளிவிட்டு, கிட்ட வந்து தடுத்தால் வெட்டி கொன்றுவிடவோம் என மிரட்டிவிட்டு எங்கள் அண்ணன் பெரியகருப்பன் இருக்கும் வரையும் எங்களை யாராலும் ஒன்றும் பண்ணமுடியாது, அவருக்கு எதிராகவா வேலை செய்யுரிங்க, அவர் ஜெயித்து வரட்டும், அப்புறம் அதிமுக காரர்கள் யாரும் உயிரோடு இருக்க மாட்டிங்க என்று மிரட்டல் விட்டு சென்றனர் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் நான் திமுக-வில் இணைந்து விட்டதால், போலீசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக எதிரிகளை காப்பாற்றும் நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u> இல்லை

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.